CIVIL SERVICES (MAIN)EXAM- 2023

SKYC-U-TML

# தமிழ் / TAMIL

## தாள் I / Paper I

## (இலக்கியம்) / ( LITERATURE )

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம்<br>*Time Allowed : **Three** Hours* | மொத்த மதிப்பெண்கள் : **250**<br>*Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுதும் முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றையும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question/part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

munotes.in

## SECTION A

**Q1.** **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) இந்திய மொழிக் குடும்பங்கள் பற்றிக் குறிப்பு வரைக. *10*

(b) தமிழுக்கு வந்துள்ள பிற மொழிச் சொற்கள் குறித்து எழுதுக. *10*

(c) தமிழ்ப் பெயர்ச் சொற்களின் இயல்புகள் பற்றி எழுதுக. *10*

(d) சங்க ஆற்றுப்படை இலக்கியங்களை அறிமுகம் செய்க. *10*

(e) சமயக் குரவர் நால்வரின் பணிகள் குறித்து எழுதுக. *10*

**Q2.** (a) பல்லவர் காலத்தில் தமிழ் மொழி அடைந்த மாற்றங்கள் சிலவற்றைச் சுட்டுக. *15*

(b) தொல்காப்பியத் திணைப்பாகுபாடுகள் குறித்து எழுதுக. *20*

(c) தமிழ்ப் பக்தி இலக்கியத்திற்கு ஆழ்வார்களின் பங்களிப்பை விவரிக்க. *15*

**Q3.** (a) தமிழில் வழங்கும் சமூக வழக்குச் சொற்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. *20*

(b) நிலையாமைக் கருத்தைச் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்தும் பாங்கை விளக்குக. *15*

(c) தமிழ்ப் பெண் கவிஞர்களின் புதுக்கவிதைகள் குறித்து எழுதுக. *15*

**Q4.** (a) சிலப்பதிகாரமும் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களும் என்பது குறித்து எழுதுக. *15*

(b) சங்க இலக்கியம் "சமயச் சார்புடையதல்ல" என்பதை நிறுவுக. *15*

(c) தமிழ்ப் புனை கதைகளில் பேச்சு வழக்குப் பயன்பாடு என்பது பற்றி எழுதுக. *20*

munotes.in

## SECTION B

**Q5.** **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) திறனாய்வின் பயன்கள் குறித்து எழுதுக. *10*

(b) 'இலக்கியத்தின் முக்கியமான கூறு - கற்பனை.' குறிப்பு வரைக. *10*

(c) அங்கதம் பற்றிய தொல்காப்பியரின் கருத்துகளை எடுத்துரைக்க. *10*

(d) பழமொழிகளின் இயல்புகள், தன்கமைகளை விளக்குக. *10*

(e) நாயக்கர் கால இலக்கிய வகைமைகள் குறித்து எழுதுக. *10*

**Q6.** (a) 'சமுதாயவியல் திறனாய்பு உள்ளடக்கத்தில் கவனம் செலுத்துகிறது' - என்ற கூற்றை ஆய்க. *20*

(b) தமிழ் நாட்டுப்புறப் பாடல்களின் வகைகள் குறித்து எழுதுக. *15*

(c) தொல்காப்பியப் புறத்திணையியல் சுட்டும் போர்முறைகள் பற்றி எழுதுக. *15*

**Q7.** (a) இரண்மையியல் நோக்கில் எழுதிய தமிழ் எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்புகளையும் அறிமுகப் படுத்துக. *15*

(b) 'அச்சிதழ்களும் மின்னிதழ்களும்' - என்பது குறித்து எழுதுக. *20*

(c) ஆங்கிலேயர் காலத் தமிழகத்தில் நிகழ்ந்த சமயமறுமலர்ச்சி குறித்து எழுதுக. *15*

**Q8.** (a) 'படைப்பிலக்கியம் போன்று மொழிபெயர்ப்பு ஒரு கலை' - என்ற கூற்றை ஆய்க. *20*

(b) கதைப்பாடல்கள் தமிழ்ச் சமூகத்தையும் வரலாற்றையும் வெளிப்படுத்தும் பாங்கை விளக்குக. *15*

(c) தேசிய இயக்கம் சார்ந்து இயங்கிய தமிழ் இதழ்கள் பற்றி எழுதுக. *15*

munotes.in

munotes.in